

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, வல்லநாட்டில் ரூபாய் 38 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, விவசாயிகளுக்கு விதை பொருட்கள், உரங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் திருமிகு கனிமொழி கருணாநிதி அவர்கள் உடன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி,மாவட்ட பஞ்சாயத்து தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, மாநகராட்சி ஆணையர் தினேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாடிப்பட்டியில் கலைஞர் நினைவு தின அமைதிப் பேரணி!

### நலத்திட்ட உதவிகள் வழங்கல்! மாவட்ட செயலாளர் அமைச்சர் அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, ஆக. 7-

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வாடிப்பட்டியில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னிலையில் அமைதி பேரணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளதாக அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார், அதன் விபரம்.

உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், செம்மொழி கண்ட நாயகர், முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக வாடிப்பட்டியில் இன்று (07.08.2023 திங்கள் கிழமை) காலை 9மணிக்கு அமைதி பேரணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கல் நடைபெறுகிறது. வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், மாவட்ட துணை செயலாளர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் முன்னிலையிலும் வாடிப்பட்டி பழைய நீதிமன்ற வளாகம் அருகில் இருந்து



அமைதி பேரணி துவங்கி வாடிப்பட்டி அண்ணா பேருந்து நிலையம் வரை சென்று முடிவடைகிறது. அதனை தொடர்ந்து பேரறிஞர் அண்ணா சிலை முன்பாக அமைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. பின்னர் ஏழை எளியோர் மற்றும் நலிந்த கழகத்தினருக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட உள்ளது.

இந்த பேரணி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தேனி வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்

### தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்கதமிழ்செல்வன் அறிக்கை

தேனி, ஆக.7-

தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்கத் தமிழ்ச் செல்வன் அறிக்கை வருமாறு

ராமநாதபுரத்தில் அகஸ்ட் 17 அன்று தமிழ் நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றும் தென் மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் (BLA-2) பயிற்சி பாசறை கூட்டத்தில் கலந்து கொள்வது தொடர்பாக, தேனி வடக்கு மாவட்ட வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம். 9.8.2023 புதன்கிழமை அன்று கீழ்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

**போடிநாயக்கனூர் தொகுதி**

இடம்: சந்திரபாண்டியன் திருமண மகால், PC பட்டி.
நேரம் : காலை 09.00 மணி.

**பெரியகுளம் சட்டமன்ற தொகுதி**

இடம் : மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண மகால், பெரியகுளம் ரோடு,

**மதுராபுரி**

நேரம்: மாலை 04.00 மணி



இக்கூட்டத்தில் அனைத்து வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், கிளை கழக, வார்டுகழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க ஒன்றிய , நகர, பேரூர் கழக

# மாணவர் அணி அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான விண்ணப்பங்கள்!

### மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவள்ளூர், ஆக.6-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக உமாணவர் அணி அமைப்பாளர்,துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப் பங்கள் வரவேற்கப்படுகிறது.

இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர்; பெருவாயல் மாவட்ட கழக அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்களை 06.08.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் பெற்று கொள்ளலாம் அதனை உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்து வருகின்ற 10.08.2023 வியாழக்கிழமை அன்று மாலைக்குள் மாவட்டக் கழக அலுவலகத்தில ஒப்படைக்க வேண்டும்



கழக தலைவர்–தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் ராமநாதபுரத்தில் நடைபெற உள்ள பாக முகவர்கள் பாசறை கூட்டத்தில் மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பாக வடக்கு தொகுதி பாகமுகவர்கள் பங்கேற்பது குறித்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் கோ தளபதி பேசிய போது எடுத்த படம் உடன் மாவட்ட கழக நிர்வாகிகள் பொன் முத்து ராமலிங்கம். வ வேலுச்சாமி. பெ குழந்தை வேலு. எம் ஜெய்ராம். தனசெல்வம். ஒச்சுபாலு. சி சின்னம்மாள். முருகவேல். ஜெ. முவேந்திரன். வழக்கறிஞர் ராகவன் பகுதி செயலாளர் அறிவுநிதி மற்றும் திரளான கழக நிர்வாகிகள் உள்ளனர்.

குறிப்பு: ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும், துணை அமைப்பாளர் பொறுப்பில் மகளிர் ஒருவரை நியமிக்க உள்ளதால் தகுதிவாய்ந்த மகளிரும் விண்ணப்பிக்க வேண்டும்.

கல்விச் சான்றிதழ் நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், ஆதார் அட்டை நகல் உள்ளிட்ட ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். கடவுச்சீட்டு (பாஸ்போட்) அளவு புகைப்படம்; விண்ணப்பத்தில ஒட்டப்பட வேண்டும். ஏற்கனவே இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய அமைப்பாளர், துணை அமைப்பாளர்களும் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வரவிரும்பினால் அவர்களும் அவசியம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாகவும் முழுமையாகவும் நிரப்ப வேண்டும்

இவ்வாறு டி.ஜெ. கோவிந்தராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சங்கத்தமிழே! தங்கத்தலைவா! எங்கள் உயிரே!



நமது உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் பெரும் துயரிலாழ்த்தி, மீளாத்துயில் கொண்டு ஆண்டுகள் ஆகிறது ஐந்து. இப்போது தான் தலைவரைப் பார்த்தோம் அல்லது எப்போதும் அவரைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற நினைப்பு எல்லோருடைய நெஞ்சில், நினைவில் இருப்பதால், ஐந்தாண்டு கடந்தது மிகப்பெரிய இடைவெளியாய் நமக்கு தெரியவில்லை. இதற்கு இன்னொரு காரணமும் இருக்கத்தான் செய்கிறது. அது, தலைவர் கலைஞர் அவர் களைப் போன்றே தேர்தல் ஜன நாயகத்தில் வெற்றிக் கதிர்களை தனது அயராத உழைப்பால் அறுவடை செய்யும், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தலைவர் தளபதியவர் தொடர் வெற்றிகளாக;

2019 உள்ளாட்சி தேர்தல் வெற்றி.

2019 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி.

2021 சட்டமன்றத் தேர்தல் அமோக வெற்றி!

2021 நகர்ப்புற உள்ளாட்சி ஆபார வெற்றி என வெற்றி மேல் வெற்றி தந்து தி.மு.கழத்தொண்டனின் தினவெடுத்த தோள்களுக்கு தேர்தல் களங்களில் தீணி தந்ததால், தலைவர் கலைஞர் அவர்களை இந்த ஐந்தாண்டுகளும் அணுப்பொழுதும் மறவாமல் அவர் வழியில் தொண்டாற்றி வருகிறோம்.

அவர் பிறந்த 1924ல் இந்திய அளவில், ஏன் உலக அளவில் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தது. அந்த ஆண்டில் தான் சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தேசிய காங்கிரசின் தலைமைப் பதவியை காந்தியார் ஏற்கிறார்.

ரஷ்யா புரட்சித்தலைவர் லெனின் அவர்கள் மறைந்த ஆண்டும் அதே 1924 ல் தான் என்று தனது நெஞ்சுக்கு நீதியில் முன்னுரையில் முத்தாய்ப்பாக தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் பிறந்த திருக்குவளை அன்றைய நாளில் பஞ்சாயத்து அந்தஸ்தில் கூட இருந்திருக்க வாய்பில்லை. ஆனால் பஞ்சாயத்து அந்தஸ்தில் இல்லாத சின்னசிறுகுக்கிராமத்தில் பிறந்த தலைவர் கலைஞர் தான் பாராளுமன்றத்தின் தலை யெழுத்தை பலமுறை நிர்ணயித்து, பல பிரதமர்கள், குடியரசு தலைவர்களை அடையாளம் காட்டினார் என்பது அவரது திடமான, தீர்க்கமான வரலாறு.

இந்த உச்சங்களை அவர் எட்ட எத்தனை எத்தனை வலிகள், வடுக்கள், துரோகங்கள், தூக்கம் துறந்த இரவுகள், தொல்லை தந்த எதிரிகள். எல்லையில்லா புகழ்மாலை, இட்டுக்கட்டிய இகழொலி. என அவர் பயணிந்த இரு நூற்றாண்டில் எவ்வளவு பெரிய தியாக, தீர வரலாறு.

தந்தை பெரியாரின் மாணவராய் பகுத்தறிவு கருத்துக்களை அரசியல் மட்டுமன்றி தொட்ட துறைகள் தோறும் முத்திரை பதித்த திறமையாளர் நமது தலைவர் கலைஞர் அவர்கள். “அம்பாள் எந்த காலத்தில் பேசினாள்? அறிவுகெட்டவனே! அது பேசாது. “கல்”. என்று பராசக்தியில் தனது 28 வயதி லேயே தனது பக்குவப்பட்ட எழுத்தில் எரிதழலாய் எரிந்து ஈரோட்டுப் பெரியாரின் கொள்கை தேரோட்டும் சாரதியாய் சங்கநாதம் புரிந்தார் நமது சிங்கத்தலைவர் கலைஞர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியாய், தளபதியாய் தன்னலம் துறந்து, அன்னை, அக்காள், மனைவி, மழலைமக்கள் இன்சுகம் மறந்து, அண்ணா! அண்ணா!! என எந்நாளும் சுழன்று, சுற்றிவந்த பகை வீரட்டி, சூழ்ந்திருந்த வர்கபேதம் தூள், தூளாக ஆற்றிய பணிகள், ஏற்ற துயரங்கள் ஏராளம்! ஏராளம்!

அண்ணாவின் ஆணையேற்று இந்திதிணிப்பு போராடக்களத்தில் 1965 ல் கோவை மசூதிபாளையம் திலக் லாட்ஜில் தங்கியிருந்த போதே கைதாகி, தேசிய பாதுகாப்பு சட்டத்தில் , பாளை தனிமைச் சிறையில் அடைபட்டு, வதைபட்ட நாளில் அவரை காண அண்ணா சிறைச்சாலை முகப்பில் தன்னை வெல்வான்! தரணி வெல்வான்! என்று எழுதியிருந்தது கண்டேன். தம்பி கருணாநிதி என்னிடம் வீடு, மனைவி மக்கள் நலன் விசாரிப்பார் என்று எண்ணியபடி சென்றேன் அவரோ கழகம் களம் காணும் இடைத்தேர்தல் குறித்தே என்னிடம் வினாவினார். என் தம்பி கருணாநிதி தன்னை வென்றார். தரணியையும் வெல்வார் என பூரித்து, புளகாங்கிதம் அடைந்து புகழ்மாலை சூடினார். அதுமட்டுமா? மன்னை பொதுக்கூட்டத்தில் பிரிதொரு நிகழ்விற்கு செல்ல முடிவெடுத்த பேரறிஞர் அண்ணா அவர்கள், திராவிட இயக்கத்தின் முதல் பகுதியை நான் முடித்திருக்கிறேன். தம்பி கருணாநிதி அதைத் தொடருவார் என்றல்லவா ஆருடம் கணித்தார்.

என்னை அறிந்த வெகுசிலரில் தம்பி கருணாநிதி முதன்மையானவர் என்று 1968 பாலர் அரங்கில் (இன்றைய கலைவாணர் அரங்கம்) நடைபெற்ற தலைவர் கலைஞரின் 44 வது பிறந்தநாள் விழாவிலும் சான்று பகன்றார்.

இயற்கையின் கோர கொடுஞ்செயல் நமது பேரறிஞர் பெருந்தகை அண்ணா மறைவிற்குப் பின் தமிழ்நாடு அரசின் தலைமை பொறுப்பை தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்ற போதே, டெல்லி தர்பார் வெஞ்சாமரமா வீசியது? மாறாக “கருணாநிதியா? அவர் பிடிவாதக்காரர். பிரிவினைவாதி. ஒன்றிய அரசிற்கு ஒத்துழைக்க மாட்டாராமே! என்று தான் அச்சம் கலந்து அவரை அடையாளப் படுத்திக் கொண்டது. ஆனால் அது அடுத்த அடுத்த ஒன்றிரண்டாண்டுகளில் உண்மையல்ல. தி.மு.க. தலைவர் கலைஞர் உறவிற்கு கை கொடுப்பார்! உரிமைக்கு உறுதியாக குரல் கொடுப்பார் என்று அன்னை இந்திராவும் ஆளும் காங்கிரஸும் உணர்ந்தனர். வி. வி. கிரி அவர்களை குடியரசு தலைவராக்க திடமான ஒத்துழைப்பு தந்தது தொடங்கி, மன்னர் மான்யம் ஒழிப்பு, வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டது என தலைவரின் கடமைகள் கணக்கிலடங்காது.

நெருக்கடி நிலையெனும் நெருப்பாற்றை நீந்திக் கடந்து, ஜன நாயகத்தை பாதுகாக்க பட்ட துயர்கள் பட்டியலிட எளிதல்ல.

“அண்ணா நினைவு நாளுக்கு வரத்தவறியோர். வெண்டைக்காய் உடலுக்கு நல்லது என்ற தலைப்பில் அமைந்த தலைவர் கலைஞரின் முரசொலி கடிதங்கள் புகழ்பெற்றவை அதேபோல் முரசொலியில் வெளிவந்த, இட்லர் ஆகிறார் இந்திரா! எனும் கார்ட்டூனும் ( கருத்துப் படம் ) இல்லஸ்ட்ரேட் ஆங்கில நாளிதழில் பகிரப்பட்டு உலகப் புகழ் பெற்றது.

எத்தனையோ பெருமைகள் உண்டு தலைவர் கலைஞரின் புகழை தொகுத்தளிக்க! அத்தனையும் சொல்ல நாளில்லை. நாளேட்டில் இடமும் இல்லை.

அவரால் உயர்ந்தது தமிழறினம்! தமிழ்! கலாச்சாரம்! பண்பாடு!

இன்றைய அவசர உலகில் வந்ததும் வாத்தியார் ராமன்களாக வட்டம் தொடங்கி, வஞ்சனை ஏதுமின்றி ஆட்சி, அதிகாரம் அடைய பெரும் பேராசை கொள்ளும் வேடிக்கை மனிதர்கள் மத்தியில், தனது வாடிக்கை கொள்கைக்காக, பதவியில் நீடிக்க விருப்பமின்றி, ஆட்சியை வலிய இழக்க முற்பட்ட ஒரே முதலமைச்சர் நமது தலைவர் கலைஞர் அவர்கள் மட்டுமே!

ஐயா பெரியாருக்கு அரசு மரியாதை அவசியமென்றால், ஆட்சி பறிபோகும் என ஆலோசனை சொன்ன, அண்மையில் மறைந்த அந்த நாள் தலைமைச் செயலாளர் சபாநாயகத்திடம், சட்டமன்றத் தலைமை பதவி போகட்டும். சரித்திரம் போற்றும் சகாப்த தலைவர் பெரியாருக்காய் என சற்றும் தயங்காமல் முதல்வர் நமது தலைவர். இலங்கை தமிழர் இன்னல் களையகளமாடிய ஈழ விடுதலை இயக்கங்களுக்கு துணை போனார் என்ற இதயமற்ற மனிதரின் பொய்காரணங்களால் இழந்தே போனார் ஆட்சியை 1991 ல்.


இப்படி ஒரு எழுத்தாளராக, பேச்சாளராக, கதையாசிரியராக, வசனகர்த்தாவாக, பாடலாசிரியராக, இந்தி எதிர்ப்பு போர்வீரனாக, மொழி காக்கும் களத்தில் அண்ணாவின் தளபதியாக, பகுத்தறிவைப் பரப்புவதில் தந்தை பெரியாரின் மாணவராக, தேர்தல் அரசியலில் 13 முறை தோல்வியே காணாத வெற்றிவீரனாக, மக்களுக்குபணிசெய்யவாய்ப்புகிடைத்தால்,முதல்வராக, எதிர்கட்சி தலைவராக, ஜனநாயகம், மொழி காக்க தன்னை பலமுறை வருத்திக் கொண்ட காராக்கிரக கைதியாக, தென்றலைத் தீண்டாமல், தீயினை தாண்டிய தியாகியாக, இன்னும், இன்னும் எத்தனையோ பரிமாணங்களில் நிறைவு பெறாத பெருவாழ்வு கண்ட தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார், “அன்னை தமிழ் மேன்மையுற, தமிழர் வாழ்வு தரணியில் உயர, எனது பதினான்காம் வயதில் வீட்டை விட்டு, வாய்க்கருசி போட்டுக் கொண்டு வெளியேறி, உதைபட்டு, வதைபட்டு, ரணம் கண்டு, ஆர்ப்பாட்டம், போராட்டம், சிறைவாசம் என நாளும் உழைக்கும் எனக்கு இறுதியில் என்ன மிஞ்சிவிடப் போகிறது?

“தமிழின விடியலுக்காய் ஓயாது உழைத்த தமிழன் இங்கே உறங்குகிறான்! என்று எனது கல்லறையில் எழுதப்படும் அந்த வாசகம் மட்டும் தானே!

இப்படி ஒல்லும் வகையெல்லாம் வாய்மையுரு தமிழரினம் வளம் காண, தன்னை வைத்துக் கொண்ட கம்பீரத்தலைவர் கலைஞர் வகுத்தளித்த பாதைவழி நடைபோடுவோமென அவர் புகழ்போற்றி இந்த அவரின் நினைவுநாளில் சூலுரை ஏற்போம்!

அமைதி வழி! அண்ணா வழி! அய்யன் கலைஞர் வழி நடைபயில்வதே, நாடாள்வதே நமது கொள்கையென தலைவர் கலைஞரின் நினைவகம் நோக்கி நினைவுப் பேரணியில் தலைவர் தளபதியவர்களின் தலைமையில் பங்கு பெறுவோம்! தலைவர் கலைஞரின் புகழ்பாடியே!

சங்கத்தமிழே!
தங்கத்தலைவா!
எங்கள் உயிரே!



வழக்கறிஞர்
**வெ.அன்புவாணன்**
கொள்கைப் பரப்பு
துணைச் செயலாளர்.